**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.78/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-1/PW-2 |
| Name | : மேகலா |
| ~~Father~~/Husband's Name | : வெங்கடேசன் |
| Village | : சிங்கபெருமாள் கோயில் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.08.2024.

**முதல் விசாரணை–**

நான் தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 24.07.2016 ஆம் தேதி என்னுடன் பிறந்த என் தம்பி ஹரீஷ் என்பவருடன் சிங்கபெருமாள் கோயிலிலிருந்து TN F 6711 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தில் நான் பின்னாடி உட்கார்ந்து கொண்டு எனது தம்பி மேற்படி வாகனத்தை ஓட்டிக்கொண்டு செங்கல்பட்டு - காஞ்சிபுரம் சாலையில் ஆத்தூர் கிராமம் அரசு நடுநிலைப்பள்ளி முன்பாக உள்ள வளைவில் சுமார் காலை 10.30 மணியளவில் சென்றுகொண்டிருந்தபோது எங்களுக்கு எதிர் திசையில் TN 19 3732 என்ற டாடா சுமோ வாகனத்தில் டிரைவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எங்களையும் எங்கள் வாகனத்தையும் இடித்தார். அந்த வாகனம் இடித்ததில் நான் கீழே விழுந்து விட்டேன்.

எனக்கு இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டது. என் தம்பியும் மேற்படி வாகனம் இடித்ததில் கீழே விழுந்து அவருக்கு பின் மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டது. பிறகு, அங்கிருந்த நபர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து, 108 ஆம்புலன்ஸ் சம்பவ இடத்திற்கு வந்தபிறகு என்னையும், எனது தம்பியையும் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அங்கிருந்த நபர்களால் அனுப்பி வைக்கப்பட்டது. மேல் சிகிச்சைக்காக என்னையும், எனது தம்பியையும் ராமசந்திரா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனது தம்பி மருத்துவமனையில் மூன்று நாட்கள் சிகிச்சை பெற்று, அவர் சிகிச்சை பலனின்றி 03.08.2016 ஆம் தேதி மருத்துவமனையில் இறந்து விட்டார். நான் 16 நாட்கள் மருத்துவமனை சிகிச்சையில் இருந்தேன்.

மேற்படி டாடா சுமோ வாகனத்தை ஓட்டிய நபர் தற்போது நீதிமன்ற ஆஜரில் உள்ளார். மருத்துவமனையில் நான் சிகிச்சையிலிருந்தபோது செங்கல்பட்டு தாலுக்கா போலீசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி **புகாரானது அ.த.சா. 3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தனர். மேற்படி டாடா சுமோ வாகனம் அதிவேகமாக வந்து எங்களை இடித்தது.

**எதிரி ஆஜராகியும் வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.78/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-2/PW-3 |
| Name | : பாலாஜி |
| Father/~~Husband's~~ Name | : ராஜகோபால் |
| Village | : ஆலப்பாக்கம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.08.2024.

**முதல் விசாரணை–**

நான் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 24.07.2016 ஆம் தேதி எனது அண்ணி மேகலா என்பவர் அவருடைய தம்பி ஹரீஷ் என்பவருடன் சிங்கபெருமாள் கோயிலிலிருந்து TN 19 6711 என்ற பஜாஜ் பல்சர் மோட்டார் வாகனத்தின் என் அண்ணி பின்னால் உட்கார்ந்துகொண்டு என் தம்பி ஓட்டிக்கொண்டு செங்கல்பட்டு –காஞ்சிபுரம் சாலையில் சென்றபோது சுமார் காலை 10.30 மணியளவில் ஆத்தூர் அரசு நடுநிலைப்பள்ளி அருகே எதிர் திசையில் வந்த TN 3732 என்ற டாடா சுமோ அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து எனது அண்ணி மற்றும் அவரது தம்பியின் வாகனத்தின் மீது மோதி என் அண்ணியும் எனது தம்பியும் கீழே விழுந்து பலத்த காயம் ஏற்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்து, உடனே நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன்.

நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்னரே என் அண்ணியையும், அவரது தம்பியையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டிருந்தனர். மேல் சிகிச்சைக்காக ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த எனது அண்ணியின் தம்பி சிகிச்சைப் பலனின்றி 03.08.2016 அன்று இறந்து விட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி ஆஜராகியும் வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.78/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-3/PW-4 |
| Name | : கலைமணி |
| Father/~~Husband's~~ Name | : டில்லிபாபு |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.08.2024.

**முதல் விசாரணை–**

நான் சிங்கபெருமாள்கோயிலில் வியாபரம் செய்து வருகிறேன். கடந்த 24.07.2016 ஆம் தேதி எனது மாமா மகள் மேகலா மற்றும் என்னுடைய மாமா மகன் ஹரீஷ் என்பவர்கள் சிங்கபெருமாள் கோயிலிலிருந்து TN 19 6711 என்ற பஜாஜ் பல்சர் மோட்டார் வாகனத்தில், மேகலா பின்னால் உட்கார்ந்துகொண்டு ஹரீஷ் மேற்படி வாகனத்தை ஓட்டிக்கொண்டு செங்கல்பட்டு –காஞ்சிபுரம் சாலையில் சென்றபோது சுமார் காலை 10.30 மணியளவில் ஆத்தூர் அரசு நடுநிலைப்பள்ளி அருகே எதிர் திசையில் வந்த TN 3732 என்ற டாடா சுமோ அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து அவர்கள் சென்று கொண்டிருந்த வாகனத்தின் மீது மோதியதாக எனக்கு தகவல் கிடைத்தது. விபத்தில் என் மாமா மகளுக்கு இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது மாமா மகனுக்கு மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டது. இருவரையும் செங்கல்பட்டு அரசு

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. பிறகு மேல் சிகிச்சைக்காக ராமச்சந்திரா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக நான் தெரிந்துகொண்டேன். மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி எனது மாமா மகன் இறந்து விட்டார். போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தனர்.

**எதிரி ஆஜராகியும் வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.